தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

———

சனிக்கிழமை, 9 ஜூலை 1977.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

1. அறிவிப்புகள்.

(1) வினாக்கள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ் நாட்டில் இருந்தபோது, சட்ட மன்ற மேலவை விதிகள் அமுலில் இல்லாத காரணத்தால், அந்த விதிகளின்கீழ் உறுப்பினர்கள் கொடுத்திருந்த வினாக்கள் எல்லாம் செயலற்றவையாக மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவரால் கருதப்பட்டது. இம்மன்றத்தின் நடவடிக்கைகள் மீண்டும் 1977ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள் அன்று துவங்கியுள்ளன. தற்போது உறுப்பினர்கள் தங்கள் வினாக்களுக்கான முன் அறிவிப்புக்களைக் கொடுத்துள்ளனர். சட்டமன்ற மேலவைத் தலைவரால் அனுமதிக்கப்பட்டு, அரசுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அவற்றிற்கான விடைகள் வந்தபின் இவ்வினாக்களை வினாப்பட்டியலில் சேர்த்து அவைமுன் வைக்க, குறைந்த கால அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த நடைமுறைக் கூட்டத்தில் வினா நேரம் வைத்துக்கொள்ள இயலாது. இருப்பினும் அரசுத் துறைகளுக்கு அனுப்பிய வினாக்கள் எவற்றிற்கேனும் விடைகள் வந்தால் அவைகளும், ஏதாவது குறுகிய கால வினாக்கள், அமைச்சர் ஒப்புதலுடன் தலைவரால் அனுமதிக்கப் பெற்றால் அவைகளும், அலுவல் ஆய்வுக் குழு முடிவுப்படி, இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக்கொள்ளப்படுமென்பதை இந்த அவைக்கு அறிவித்துக்கொள்கிறேன். அவை இதற்கு ஒப்புதல் அளிக்குமென்று நம்புகிறேன்.

அரசுத்துறைகள் இக்குறைந்த கால அளவு முடியும் வரை காத்திருக்காமல் உடனடியாக வினாக்களுக்கான விடைகளை அனுப்பவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்கள் ஆணையிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.